පාර්ලිමේන්තු ප්‍රකාශන මාලා අංකය- 492

ආයතනයෙ නම - **දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය, මාතලේ.**
පාර්ලිමේන්තුවේ රාජ්‍ය ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119(4) යටතේ ගරු ආයතන භාර අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම.

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் - 492

நிறுவனத்தின் பெயர் - **மாவட்ட செயலகம், மாத்தளை.**
பாராளுமன்றத்தின் அரசாங்கக் கணக்குக் குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை தொடர்பில் நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் கௌரவ நிறுவனங்களிற்குப் பொறுப்பான அமைச்சரின் அவதானிப்புகள் மற்றும் எடுக்கப்படும் நடவடிக்கைகள் குறித்து பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.

Parliamentary Series No – 492

Name of the Institution – District Secretariat, Matale
Submission of observations of the Hon' Minister in charge of the instituions and Steps taken with regard to the reports tabled by the Committee on Public Accounts in terms of Standing Order No.119(4)

| செயற்குழுவினால் கண்டறியப்பட்ட குறைபாடுகள் | குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்/தற்போதைய நிலைமை |
|---|---|
| **01.** பிணை ஆவணங்கள் இற்றைப்படுத்தப்படாமை. | தற்போது பிணை ஆவணங்கள் இற்றைப்படுத்தப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. |
| **02.** சகல வாகனங்களிலும் அரச இலட்சினை பொறிக்கப்படாமை. | சகல அரச வாகனங்களிலும் அரச இலட்சினை பொறிக்கப்பட்டுள்ளன. |
| **03.** அரச வாகனங்களின் விபத்து தொடர்பாக நி.பி. பிரகாரம் சரியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமை. | தற்போது வானங்களின் விபத்துக்கள் தொடர்பாக சகல நி.பி. பரிசீலனை நடவடிக்கைகள் நிறைவுச் செய்யப்பட்டு உரிய அறவீடுகள் அறவிடப்பட்டுள்ளன. |
| **04.** ஓர் வருடத்திற்கு மேல் நிலுவையிலுள்ள கடன் மீதிகள் காணப்படல். | ஓய்வுப் பெற்ற உத்தியோகத்தர்களின் நிலுவையிலுள்ள கடன் மீதிகள் தீர்க்கப்பட்டுள்ளதுடன், பணித்தடை செய்யப்பட்ட உத்தியோகத்தர்களின் நிலுவையிலுள்ள கடன் மீதிகள் அறவிடப்பட்டு வருகின்றன. சேவையில் வெறித்தாக்கல் செய்யப்பட்ட உத்தியோகத்தரது கடன் மீதியானது அ.நி.சு.01/2024 இன் பிரகாரம் புத்தகத்தில் அகற்றப்பட்டதுடன், மற்றைய உத்தியோகத்தரின் கடன் நிலுவையானது அறவிடப்பட்டு வருகின்றன.. |
| **05.** பொது வைப்புக் கணக்கில் காலாவதியான வைப்புக்கள் தொடர்பாக நி.பி.571 இன் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமை. | பொது வைப்பு கணக்கில் உள்ள 5 வருடத்திற்கு மேற்பட்ட நிலுவைகள் தற்போது செலுத்தி முடிக்கப்பட்டுள்ளன. |
| **06.** ஏனைய கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் சார்பாக அறவிடப்பட்ட வருமானங்கள் குறித்துரைக்கப்பட்ட காலத்தினுள் உரிய நிறுவனங்களுக்கு அனுப்பப்படாமை. | ஒன்றுத்திரட்டப்பட்ட ஏனைய கணக்கீட்டு உத்தியோகத்தர்களின் வருமானங்கள் குறித்துரைக்கப்பட்ட காலத்தினுள் உரிய நிறுவனங்களுக்கு அனுப்பும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தற்போது அத்தகைய தாமதங்கள் இல்லை. |
| **07.** மாதாந்தம் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தினை நடத்தப்படாமை. | 2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் முதல் மார்ச் மாதங்களில் நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடிகளின் காரணமாகவும், ஜூலை மாதம் மற்றும் செப்டம்பர் மாதங்களில் முறையாக கலந்துரையாடுவதற்கு விடயங்கள் இல்லாமை மற்றும் ஒருங்கிணைப்பு குழு தலைவரின் வேலைப்பழு காரணமாக கூட்டத்தினை நடாத்துவதற்கு திகதி ஒன்றினை தீர்மானிப்பதற்கு முடியாமை ஆகிய காரணங்களினால் கூட்டம் நடாத்தப்படவில்லை என்பதோடு, 2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் கௌரவ சனாதிபதி அவர்களின் தலைமையில் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டமானது நடாத்தப்பட்டது<br><br>2024 ஆம் ஆண்டு மார்ச், ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் நிறைவேற்று உத்தியோகத்தர்களின் பணிப் புறக்கணிப்பு காரணமாக கூட்டங்கள் நடாத்த முடியாது போனதுடன், ஆகஸ்ட் மாதம் வரையில் |

| | |
|---|---|
| | மாதத்திற்கு ஒரு தடவை மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டம் நடாத்தப்பட்டுள்ளது. செப்டம்பர், ஒக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் சனாதிபதி தேர்தல் மற்றும் பாராளுமன்ற தேர்தல் ஆகியவற்றின் காரணத்தினால் கூட்டங்கள் நடாத்தப்படவில்லை என்பதோடு, 2025 ஆம் ஆண்டிற்குள் 8 தடவைகளும் 2026 ஆம் ஆண்டிற்குள் 02 தடவைகளும் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. |
| **08.** மாவட்ட செயலாளரினால் அழைப்பு விடுக்கும் பிரதேச செயலாளர் மாநாடு மாதாந்தம் நடத்தப்படாமை. | 2023 ஆம் ஆண்டு உருவான மிகவும் கட்டுப்பாடான நிதிச் சூழலில் அரச செலவினங்களை முகாமைத்துவம் செய்வது தொடர்பாக வெளியிடப்பட்ட தேசிய வரவுசெலவுத் திட்ட சுற்றறிக்கை இலக்கம் 03/2022, 08/2022, 09/2022 மற்றும் சனாதிபதி செயலாளரினால் வெளியிடப்பட்ட PS/SB/Circular/10/2022 மற்றும் 2022.08.15 ஆந் திகதிய சுற்றறிக்கைகளின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் அரச நிறுவனங்களினால் பல்வேறுப்பட்ட விழாக்கள் நடாத்தப்பட கூடாதென கடுமையாக வலியுறுத்தியதுடன், இதன் காரணமாக பிரிவு மட்டத்தில் பிரதேச செயலாளர்களின் மாநாடு நடாத்தவில்லை என்பதோடு, பெரும்பாலும் ஈ-மெயில், Whatsapp மற்றும் zoom தொழிற்நுட்பத்தின் ஊடாக பிரதேச செயலாளர்களை அறிவூட்டல் நடவடிக்கைகள் செலவினமற்று நடாத்தப்பட்டதுடன், அத்தியாவசிய கடமைகளுக்காக மாவட்ட செயலகத்தில் நடாத்தப்படும் கூட்டங்களில் பெரும்பாலும் இவ் உத்தியோகத்தர்களுக்கான அறிவூட்டல் வழங்கப்படுகின்றன. |
| **09.** மாதாந்தம் மாவட்ட வீடமைப்பு குழுவானது கூடப்படாமை. | நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் செயற்படுத்தப்படும் நிகழ்ச்சித்திட்டங்களின் பிரகாரம் மற்றும் கலந்துரையாடுவதற்கு போதுமான விடயங்கள் காணப்படின் மாத்திரம் இவ் கூட்டமானது நடாத்தப்படும். 2023 ஆம் ஆண்டு ஜூன் மற்றும் ஒக்டோபர் மாதங்களில் குழுக் கூட்டமானது நடாத்தப்பட்டதுடன், 2025 ஆம் ஆண்டில் 04 குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. |
| **10.** மாதாந்தம் மாவட்ட உர ஒருங்கிணைப்பு குழுவானது கூடப்படாமை. | பிரதான இரு போகங்களில் மாத்திரம் உர ஒருங்கிணைப்பு குழுகூட்டமானது நடாத்தப்படும். |
| **11.** மாதாந்தம் விலையினை நிர்ணயிக்கும் குழுவானது கூடப்படாமை. | மாதாந்தம் விலை நிர்ணயிக்கும் குழு கூட்டங்கள் நடத்தப்படுவதில்லை என்பதுடன், வருடத்தின் முற்பகுதி மற்றும் பிற்பகுதியில் (வருடத்திற்கு இரு முறை) மாத்திரம் நடாத்தப்படும். எனினும் சந்தையில் அசாதாரண ரீதியாக விலை ஏற்ற இறக்கங்கள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் விசே விலை நிர்ணய குழுக் கூட்டங்கள் நடாத்தபடும். |
| **12.** பிரஜை / சேவைபெறுநர் சாசனம் செயற்படுத்துதல் தொடர்பாக மேற்பார்வை செய்தல் அல்லது மதிப்பீடுச் செய்வதற்கு முறைமையொன்று தயாரிக்கப்பட்டிருக்காமை. | பிரஜை / சேவைபெறுநர் கருத்துக்கள் மற்றும் முறைப்பாடுகளை குறிப்பிடுவதற்கு வசதிகள் வழங்கப்பட்டுள்ளதுடன், அது தொடர்பாக மேற்பார்வை செய்வதற்கு நிறைவேற்று உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். |

| | |
|---|---|
| **13.** தயாரிக்கப்பட்ட மனித வள திட்டத்தின் ஊடாக பணிக்குழாமில் **50%** அதிகமானோருக்கு குறைந்தபட்சம் 12 மணித்தியாலயத்திற்கு குறையாத பயிற்சியிற்கான சந்தர்ப்பத்தினை உறுதிப்படுத்தப்படாமை. | வருடத்திற்கு கிடைக்கப் பெறும் நிதியிற்கு அமைய உயரிய ரீதியில் திறன் அபிவிருத்தி தொடர்பாக உத்தியோகத்தர்களுக்கு பயிற்றுவிப்புக்கள் நடாத்தப்படும். |
| **14.** முழு பணிக்குழாமிற்குமான செயலாற்றுகை உடன்படிக்கை தயாரிக்கப்பட்டு உடன்படிக்கை செய்யப்படாமை. | அரச நிர்வாக சுற்றிக்கை இலக்கம் 02/2018 இன் பிரகாரம் 2023 ஆம் ஆண்டின் சகல பணிக்குழாமிற்கும் செயலாற்றுகை உடன்படிக்கை தயாரிக்கப்பட்டு உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன. |
| **15.** மாவட்ட காணி பயன்பாட்டுக் குழுவானது குறைந்தபட்சம் காலாண்டுக்கு ஒரு தடவையேனும் கூடப்படாமை. | நிதி ஒதுக்கீட்டின் கீழ் இரண்டாம் மற்றும் மூன்றாம் காலாண்டிற்கான மாவட்ட காணி பயன்பாட்டு குழுக் கூட்டமானது நடாத்தப்பட்டது. |
| **16.** திட்டமிடப்பட்ட பயிற்சி சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டுள்ள பயிற்சி சந்தர்ப்பங்களானது **50%** இனை விடவும் குறைந்த மட்டத்தில் காணப்படல். | 2024 ஆம் ஆண்டில் 1938 உத்தியோகத்தர்களில் 1025 உத்தியோகத்தர்களுக்கும் 2025 ஆம் ஆண்டில் 1910 உத்தியோகத்தர்களில் 1475 உத்தியோகத்தர்களுக்குமான பயிற்சி சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டன. |
| **17.** மாவட்ட சுற்றாடல் குழுவானது குறைந்த பட்சம் மாதத்திற்கு இரண்டு தடவையேனும் கூடாமை. | குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட கடிதங்களின் பிரகாரம் இவ் கூட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், அத்தியாவசியமாக கலந்துரையாட வேண்டிய விடயங்கள் காணப்படும் சந்தர்ப்பங்களில் இதற்கான முன்னுரிமை வழங்கப்பட்டு கூட்டங்கள் நடாத்தப்படும். |

திரு.எல்.பீ.மதனாயக்க,
மாவட்ட செயலாளர்,
மாவட்ட செயலகம்,
மாத்தளை.

L.P. Madanayake
District Secretary
Matale

திரு.எம்.ஏ.பீ.மிலஜித்,
பிரதான கணக்காளர்,
மாவட்ட செயலகம்,
மாத்தளை.

M.A. Priyanga Milajith
Chief Accountant
District Secretariat
Matale.

## செயலாளரின் பரிந்துரை

மாவட்ட செயலாளரினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதுடன் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகளுக்கு தனிப்பட்ட கவனம் செலுத்தி அவற்றை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு மாவட்ட செயலாளரிக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது.

திரு. எஸ். ஆலோகபண்டார
செயலாளர்
பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

S. Alokabandara
Secretary
Ministry of Public Administration,
Provincial Councils and Local Government

## அமைச்சரின் பரிந்துரைகள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

அரசாங்க கணக்குக்குழு மூலம் மாவட்ட செயலாளரிற்கு வழங்கப்பட்டிருக்கும் ஆலோசனைகளுக்கு சிறப்பு கவனம் செலுத்தி, அக்குறைபாடுகள் மீண்டும் ஏற்படாமல் இருக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க அமைச்சின் செயலாளரிற்கு நான் அறிவுறுத்தியுள்ளதுடன், அச்செயற்பாடுகள் மூலம் 2026 ஆம் ஆண்டிற்குள் அதன் அடைவு மட்டத்திலிருந்து உயர் மட்டத்தை எட்ட முடியும் என்று எதிர்பார்க்கின்றேன்.

மாண்புமிகு (பேராசிரியர்) ஏ. எச். எம். எச். அபயரத்ன அவர்கள் (பா.உ)
பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

Prof. A.H.M.H. Abayarathna
Minister of Public Administration, Provincial
Councils and Local Government
Independence Square, Colombo 07.